திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் காலதாமதமாவதில், குறிப்பாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். 40 ஆண்டுக்காலம், 50 ஆண்டுக் காலம் ஆகியும்கூட முடியாத நிலை இருக்கிறது. இதைப்பற்றி ஒரு விவசாயி கவிதைகூட பாடியிருக்கிறான். 'வயல் வரப்பு தகராறுக்காக வழக்கு மன்றம் சென்றேன், வழக்கும் வாய்தாவும் அப்படியே இருக்கின்றன, வயல்மட்டும் வக்கீலுக்குச் சொந்தமாகிவிட்டது' என்று ஒரு கவிதையை விவசாயி ஒருவன் பாடியிருக்கிறான். ஆகவே, இந்த நிலைமையைப் போக்க, விவசாயிகள் வழக்கு என்றால், நிலத்தகராறு என்றால் குறிப்பிட்ட ஆண்டில் முடித்துத் தரவேண்டும் என்ற உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி, அதற்கான ஆணையைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே கூடிய அந்த மாநாட்டில், Chief Justices, C.M. and P.M., ஆகியோரைக் கொண்ட அந்த மாநாட்டில், இந்தப் பிரச்சினைகள் எல்லாம் ஆராயப்பட்டு, துரிதமாக நடக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்க, அந்தப் பரிந்துரைகள் வந்த பிறகு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 383, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

383--

பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் அரசு உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு நிலம் அளித்தல்

***14739--டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு விளையாட்டு மைதானத்திற்காக அருகிலுள்ள தரிசுப் புறம்போக்கு நிலத்தை அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், எமனேஸ்வரம் கிராமத்தில் 2.71 ஹெக்டேர் புறம்போக்கு நிலத்தை

அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நில மாற்றம் செய்து 7-3-1994 அன்று கொடுக்கப்பட்டுவிட்டது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் உயர்நிலைப் பள்ளிக்கு அந்தப் பள்ளியின் அருகாமையிலுள்ள கிட்டத்தட்ட 5 ஏக்கர் தரிசுப் புறம்போக்கை, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைப்படி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வழங்கியமைக்காக, பரமக்குடி நகரம் எமனேஸ்வரம் பகுதி மக்களின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை இந்தச் சமயத்தில் கூறிக் கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதியான பரமக்குடி தொகுதியில், மஞ்சூர் உயர்நிலைப் பள்ளியின் அருகாமையிலே 6 ஏக்கர் இடம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியில் இன்னொரு ஊரைப்பற்றிக் கேட்டால் பதில் எப்படிக் கிடைக்கும்? இதோடு தொடர்பு உடையதாக அது இருக்காது. இந்த ஊரைப் பற்றி மட்டும் கேட்கவேண்டும். இன்னொரு ஊரின் பக்கத்திலே என்ன புறம்போக்கு நிலம் இருக்கிறது என்பதற்கு எல்லாம் அமைச்சரிடத்திலே விவரம் இருக்காது. இதைப்பற்றி மட்டும் கேளுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நலன் கருதி, அருகில் உள்ள புறம்போக்கு நிலங்களை பொதுவான காரியங்களுக்கு இதுபோன்ற பள்ளிகளுக்கும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து, ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு விளையாட்டுக்களில் அதிகமாக மாணவர்கள் ஈடுபடவேண்டுமென்ற உணர்வைப் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் எல்லா அரசுப் பள்ளிகளுக்கும் விளையாட்டுக்களுக்கும், மற்றவைகளுக்கும் இடம் கேட்கின்றபோது அது நீர் வழிப் புறம்போக்கு குட்டை, குளம் தண்ணீர் பிடிப்பு என்பதற்கு மட்டுமல்லாத, மற்ற தரிசுகளாக இருந்தால், அதை எல்லா இடங்களிலும் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. மேய்ச்சல் தரை, மந்தைப் புறம்போக்கு என்பதைப் பொறுத்தவரை, அது வாயில்லாத ஜீவன் என்பதால் அதிலே மட்டும்

கொஞ்சம் தயக்கம் காட்டுகிறோம். நீர்ப் பிடிப்புகளில் தயக்கம் காட்டுகிறோம். மற்ற எல்லா இடங்களிலும் மற்ற பள்ளிகள் என்கிறபோது இதை எல்லாம் ஆராய்கிறோம். ஆனால் அரசுப் பள்ளி என்கிறபோது உடனடியாகக் கொடுத்து விடுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் நீர் வழிப் புறம்போக்கு கொடுக்கமுடியாது என்று கூறினார்கள். ஒரு காலத்தில் நீர் வழிப் புறம்போக்காக இருந்தது. இப்போது மறு ஆய்வு செய்து, அந்தப் பகுதியை எல்லாம் தல ஆய்வு செய்து, அவ்வாறு நீர் வழிப் புறம்போக்கு இல்லாத பகுதிகளை, இது போன்ற பள்ளிகளுக்கு, பொதுக் காரியங்களுக்குக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் மறு ஆய்வு செய்வாரா, உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நலன் கருதி நீர் நிலைப் புறம்போக்கு, அதனாலே வறட்சிக் காலங்களில் மக்களுக்குப் பயன்படுகிறதா என்பதை ஆராய்ந்து அதன் தன்மைக்கேற்ப முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 384, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

384--

வருவாய்த் துறையின் வருமானம் குறைவதைத் தடுத்தல்.

****21560--டாக்டர் அ. ஸ்ரீதரன்:***

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கடந்த *10* ஆண்டுகளாக வருவாய்த்துறை மூலம் பெறப்படும் வருமானம் குறைந்து வருவதைத் தடுக்க அரசு எடுத்திருக்கும் சிறப்பு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையிலும், பணத்தை வசூல் செய்து அரசுக்குச் சேர்க்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் மட்டும் இந்தத் துறை செயல்படுவது அல்ல: 'வருவாய், வருவாய், வாருங்கள், வாருங்கள், உங்களுடைய குறையைச் சொல்லுங்கள். அதைத் தீர்த்துக்கொண்டு போங்கள்' என்ற முறையில் இந்தத் துறை இருப்பதனாலேதான் எங்கேயாவது ஆண்டுதோறும் புயல், வெள்ளம்,